# March 2, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. அமெரிக்கா-இஸ்ரேல் கூட்டாக நடத்திய அதிரடித் தாக்குதலில் ஈரானின் உச்ச தலைவரான தலைமை மதகுரு அயதுல்லா அலி கமேனி (86) கொல்லப்பட்டார்.

(i) அவரது கொலைக்குப் பழிதீர்க்க இதுவரை இல்லாத அளவில் தீவிர பதிலடி தாக்குதலைத் தொடுப்போம் என்று ஈரான் சூளுரைத்துள்ளது.

(ii) மத்திய கிழக்கில் இரண்டாவது நாளாக போர் தொடர்ந்ததால், அந்தப் பிராந்தியத்தில் உச்சகட்ட பதற்றம் நிலவுகிறது.

(iii) அணு ஆயுதம் தயாரிக்கத் தேவையான யுரேனியத்தை செறிவூட்டி வருவதாகக் குற்றஞ்சாட்டி, ஈரானில் நூற்றுக்கும் மேற்பட்ட இடங்களைக் குறிவைத்து, அமெரிக்க-இஸ்ரேல் கூட்டுப்படைகள் பெரிய அளவிலான வான்வழித் தாக்குதலை நடத்தின. ஈரானின் புரட்சி கர காவல் படையின் தளங்கள், வான் பாதுகாப்பு நிலைகள், ஏவுகணை- ட்ரோன் ஏவுதளங்கள், ராணுவதளங்களைக் குறிவைத்து இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

(iv) கமேனி இறப்பைத் தொடர்ந்து, இடைக்கால தலைமை மதகுருவாக அயதுல்லா அராஃபி (67) நியமிக் கப்பட்டுள்ளார். புதிய தலைமை மதகுரு தேர்வு செய்யப்படும் வரை நாட்டை நிர்வகிக்க இடைக்கால குழு அமைக்கப்பட்டுள்ளது. அதில் அயதுல்லா அராஃபி, அதிபர் மசூத் பெசஷ்கியான், நீதித் துறை தலைமை மதகுரு ஹுசைன் மோசேனி இஜே ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

2. படுகொலைசெய்யப்பட்டுள்ள ஈரான் தலைமை மதகுரு அயதுல்லா அலி கமேனியின் வாழ்க்கை ஏற்ற இறக்கங்கள் நிறைந்தது :-

(i) கடந்த 1939-ஆம் ஆண்டு ஈரானின் மஷாத் பகுதியில் பிறந்த அயதுல்லா அலிகமேனி, 1960-ஆம் ஆண்டுகளில் சமய போதனை கல்லூரியில் அயதுல்லா கொமேனியின் (ஈரா னின் முதல் தலைமை மதகுரு) கீழ் படித்தார்.

(ii) ஈரானின் கடைசி அரசரான முகமது ரெசா பஹலவிக்கு எதிரான போராட்டத்தில் பங்கேற்ற கமேனி, சிறைச்சாலையிலும் தலைமறைவாகியும் தனது வாழ்நாளைக் கழித்தார்.

(iii) இராக் மற்றும் பிரான்ஸுக்கு கொமேனி நாடு கடத்தப்பட்டு, பின்னர் ஈரான் திரும்பினார். அந்நாட்டு அரசர் முகமது ரெசா பஹலவிக்கு எதிரான இஸ்லாமிய புரட்சியை கொமேனி வழிநடத்தினார்.

(iv) இதன் விளைவாக 1979-ஆம் ஆண்டு பஹலவியின் ஆட்சி அகற்றப்பட்டது. ஈரான் இஸ்லாமிய குடியரசுக்கு வழிகோலிய அவர், அந்நாட்டின் தலைமை மதகுருவானார். அப்போது ரகசிய புரட்சிகர கவுன்சிலில் கமேனி நியமிக்கப்பட்டார்.

(v) 1981-ஆம் ஆண்டு ஈரானின் மூன்றாவது அதிபராக அவர் தேர்ந்தெடுக்கப்பட்ட நிலையில், அதே ஆண்டில் குண்டு வீச்சு ஒன்றில் அவரின் ஒரு கை செயலிழந்தது.

(vi) 1980- ஆண்டுகளில் இராக்குடனான போருக்குப் பின்னர், ஈரானை ஸ்திரமாக்கி 30 ஆண்டுகளுக்கும் மேலாக கொமேனியைவிட கமேனி நீண்ட காலம் ஆட்சி செய்தார். ஷியா மதகுருக்கள், அரசு முகமைகளைச் சேர்ந்த அதிகாரிகளின் ஆட்சிமுறைக்கு கமேனி வழிகோலினார். இது அரசுப் பொறுப்புகளை பலவீனமாக்கி, அவரையே உச்சபட்ச அதிகாரம் கொண்டவராக நிலைநிறுத்தியது.

(vii) மக்களால் தேர்ந் தெடுக்கப்பட்ட அரசின் முக்கியத்துவத்தைக் குறைக்க நியமன நடைமுறையைப் பயன்படுத்தினார்.

(viii) மேற்காசியாவில் செயல்படும் ஆயுதக் குழுக்கள் மற்றும் நேசப் படைகளின் கூட்டணியான 'ஆக்சிஸ் ஆஃப் ரெசிஸ்டன்ஸ்-ஐ ஈரானின் புரட்சி கர காவல் படை வழிநடத்துகிறது. இதன்மூலம் கமேனியின் ஆட்சியின் கீழ், வழக்கமான போர் முறையில் இருந்து ஆயுதக் குழுக்கள் மற்றும் நேசப் படைகளுக்கு ஆதரவளிக்கும் முறைக்கு ஈரான் மாறியது.

(ix) ஈரானில் பணவீக்கம் அதிகரித்து வாழ்க்கைச் செலவு அதிகரித்ததால் ஆத்திரமடைந்த மக்கள், கடந்த ஆண்டு டிசம்பர் இறுதியில் இருந்து போராட்டத்தில் ஈடுபட்டனர். அத்துடன் கடந்த 1979-ஆம் ஆண்டு அந்நாட்டில் இஸ்லாமிய புரட்சி நடைபெற்றது முதல், ஈரானில் மதகுருக்கள் ஆட்சி செய்யும் மரபை முடிவுக்குக் கொண்டு வரவேண்டும் என்ற குரல்களும் வலுக்கத் தொடங்கின. இதனால் அந்நாட்டில் மக்களுக்கு எதிராக கடுமையான அரசியல் அடக்குமுறை நிலவியது. இந்தச் சூழலில், அமெரிக்கா மற்றும் இஸ்ரேலின் கூட்டுத் தாக்குதலில் கமேனி படுகொலை செய்யப்பட்டார்.

3. ஈரான், இஸ்ரேல்-அமெரிக்கா இடையேயான போரால் இந்தியாவில் பெட்ரோல் - டீசல் விநியோகத்தில் தற்போதைக்கு தட்டுப்பாடு ஏற்படாது என்று மத்திய அரசு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதுகுறித்து மத்திய அரசு அதிகாரிகள் தரப்பு கூறியதாவது:

- இஸ்ரேல்-அமெரிக்கத் தாக்குதலுக்கு பதிலடியாகவும், ஈரான் தலைமை மதகுரு கமேனி கொல்லப்பட்டதற்குப் பழிவாங்கும் வகையிலும், உலகில் கச்சா எண்ணெய் ஏற்றுமதிக்கு அதிகம் பயன்படுத்தப்படும் கடல் பகுதிகளில் ஒன்றான ஹோர்முஸ் நீரிணையை ஈரான் மூடியது.
- இந்தியா தனக்குத் தேவையான 88 சதவீத கச்சா எண்ணெய், 60 சதவீத இயற்கை எரிவாயுவை சவூதி அரேபியா, கத்தார், ஐக்கிய அரபு அமீரகம் உள்ளிட்ட வளைகுடா நாடுகளில் இருந்து கப்பல்கள் மூலம் இந்த நீரிணை வழியாகவே இறக்குமதி செய்து வருகிறது.
- இந்த நீரிணையை ஈரான் மூடிவிட்ட போதிலும், இந்தியாவில் தற்போதைக்கு பெட்ரோல்-டீசல், எரிவாயு தட்டுப்பாடு ஏற்படாது. ஏனெனில் இந்தியாவிடம் ஏற்கெனவே 10 நாள்களுக்குத் தேவையான பெட்ரோல், டீசல், எரி வாயு இருப்பு உள்ளது. இதேபோல் அவசர காலத்துக்கு பயன்படுத்துவதற்காக

சேமித்து வைக்கப்பட்டுள்ள பெட்ரோல், டீசல், எரிவாயு ஆகியவை மேலும் 5 முதல் 7 நாள்கள் வரை பயன்படுத்தமுடியும்.

- இதேபோல், ஹோர்முஸ் நீரிணை ஈரானால் மூடப்பட்டிருப்பது அதிககாலம் நீடிக்காது எனக் கூறப்படுகிறது. அப்படி நீடிக்கும்பட்சத்தில், வளை குடர் நாடுகளுக்கு மாற்றாக ரஷியாவிடம் இருந்து கச்சா எண்ணெய்யை இந்தியா மீண்டும் இறக்குமதி செய்யும். ஏற்கெனவே ரஷியாவிடம் இருந்து அதிகஅளவு கச்சா எண்ணெய்யை இறக்குமதி செய்து, அமெரிக்க நிர்ப்பந்தத்தால் இந்தியா அண்மையில் அதைக் குறைத்தது. ஆனால், தற்போது ஏற்பட்டுள்ள பிரச்னையைக் கருத்தில் கொண்டு, ரஷியாவை மீண்டும் இந்தியா அணுகி கச்சா எண்ணெய்யை அதிகம் கொள்முதல் செய்ய முடியும்.
- வளைகுடா நாடுகளில் இருந்து கச்சா எண்ணெய் ஏற்றி வரும் கப்பல் இந்தியாவுக்கு ஐந்து நாள்களில் வந்துவிடும். ஆனால், ரஷியாவில் இருந்து கச்சா எண்ணெய் இறக்குமதி செய்யும்பட்சத்தில், அக்கப்பல் இந்தியா வருவதற்கு 30 நாள்கள் ஆகும்.
- அதேநேரத்தில் எல்பிஜி, எல்என்ஜி எரிவாயு இறக்குமதிக்கு மாற்று உபாயத்தை இந்தியா கண்டறிய வேண்டும். ஏனெனில் இந்தியாவிடம் அவை போதிய இருப்பு இல்லை. அவை காலியாவதற்குள் மாற்று உபாயத்தைக் கண்டறியவில்லையெனில், அவற்றுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டு விலை அதிகரிக்க வாய்ப்புள்ளது என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

(i) விலை அதிகரிக்கும்-நிபுணர்கள்:

- ஈரான் பிரச்னையால் கச்சா எண்ணெய் விலை சர்வதேச சந்தையில் பீப்பாய்க்கு 73 டாலராக அதிகரித்திருப்பதை சுட்டிக்காட்டியுள்ள சந்தை நிபுணர்கள், வரும் நாள்களில் இது மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளதாகவும், இது இந்திய சந்தைகளில் பெட்ரோல்-டீசல் விலை உயர்வுக்கு வழிவகுக்கும் எனவும் கணித்துள்ளனர்.

4. ஈரான் மற்றும் வளைகுடா நாடுகளுக்கு புதிய 'விலை, காப்பீடு மற்றும் சரக்கு' (சிஐஎஃப்) உறுதிப்பாடுகளை தவிர்க்குமாறு தங்களது உறுப்பினர்களுக்கு இந்திய அரிசி ஏற்றுமதியாளர்கள் கூட்டமைப்பு அறிவுறுத்தியது. ஈரான்-இஸ்ரேல் மற்றும் அமெரிக்கா இடையே மோதல் தொடர்ந்து வரும் நிலையில் இந்த அறிவிப்பை ஏற்றுமதியாளர்கள் சங்கம் வெளியிட்டுள்ளது.

(i) சிஐஎஃப் என்பது கடல்வழிப் போக்குவரத்து மூலம் சரக்குகளை அனுப்பும்போது அதை வாங்குபவருக்கு விற்பனையாளர்கும் உறுதிமொழியாகும்.

(ii) இதுதொடர்பாக இந்திய ஏற்றுமதியாளர்கள் கூட்டமைப்பு (ஐஆர்இஎஃப்) வெளியிட்ட செய்திக் குறிப்பில், 'ஈரான் மற்றும் ஐக்கிய அரபு அமீரகத்தில் நிலவும் பதற்றமான சூழலால் கடல்வழியில் சரக்குகளை எடுத்துச் செல்லும் கப்பல்களுக்கான எரிபொருள் விநியோகம் மற்றும் விலையில் உடனடியாக தாக்கம் ஏற்படலாம்.

(iii) இதனால் கன்டெய்னர் மற்றும் சரக்குகளுக்கு ஏற்கெனவே நிர்ணயிக்கப்பட்ட

விலையில் ஏற்றுமதியாளர்கள் விநியோகம் செய்ய நேரிட்டால் அது பெரும் நஷ்டத்துக்கு வழிவகுக்கும். எனவே, ஈரான் மற்றும் வளைகுடா நாடுகளுக்கு புதிய சிஜஎஃப் உறுதிப்பாடுகள் மேற்கொள்வதை உறுப்பினர்கள் தவிர்க்க வேண்டும்.

(iv) ஏற்கெனவே, ஏற்றுமதி செய்யப்பட்டு துறைமுகத்தில் தேங்கியுள்ள சரக்குகளின் நிலை குறித்து கூட்டமைப்பு கண்காணித்து வருகிறது. சூழலை கருத்தில்கொண்டு அடுத்தடுத்த நாள்களில் மேலும் சில அறிவுறுத்தல்கள் வழங்கப்படும்' எனத் தெரிவிக்கப்பட்டது.

(v) 50 சதவீத அரிசி ஏற்றுமதி:

- இந்தியாவின் மொத்த அரிசி ஏற்றுமதியில் 50 சதவீதம் ஆப்பிரிக்க மற்றும் மேற்கு ஆசிய நாடுகளுக்கு மேற்கொள்ளப்படுகிறது. 2025 ஏப்ரல்-டிசம்பர் காலகட்டத்தில் மேற்கு ஆசியாவுக்கு 39 லட்சம் டன் அரிசியும் ஆப்பிரிக்காவுக்கு 71.6 லட்சம் டன்அரிசியும் இந்தியா ஏற்றுமதி செய்தது. சவூதி- அரேபியா, ஈரான், இராக், ஐக்கிய அரபு அமீரகம், யேமன் ஆகிய 5 நாடுகளுக்கு 50 சதவீத பாஸ்மதி அரிசியை இந்தியா ஏற்றுமதி செய்கிறது.

(vi) வர்த்தகத்துக்குப் பெரும் பாதிப்பு:

- ஹோர்முஸ் நீரிணையை மூடுவதாக ஈரான் அறிவித்த நிலையில், இந்திய வர்த்தகத்துக்குப் பெரும் பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளதாக உலக வர்த்தக ஆராய்ச்சி முன்னெடுப்பு (ஜிடிஆர்ஜ) தெரிவித்தது.
- இதுகுறித்து ஜிடிஆர்ஜ நிறுவனர் அஜய் ஸ்ரீவாஸ்தவா கூறி யதாவது: ஹோர்முஸ் நீரிணை மூடப்பட்டுள்ளதால் அவ்வழியே கப்பல் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் கச்சா எண்ணெய் சுத்திகரிப்பாளர்கள் செங்கடல் வழியே சரக்குகளை கையாள வேண்டிய சூழல் உருவாகியுள்ளது.
- கச்சா எண்ணெய் விநியோக பற்றாக்குறையை சீர் செய்ய ரஷியா, அமெரிக்கா, மேற்கு ஆப்பிரிக்கா மற்றும் தென் அமெரிக்காவில் இருந்து அதிகப்படியான கச்சா எண்ணெய் இறக்குமதியை பிறநாடுகள் மேற்கொள்ளும்போது அதன் விலை உயரும் அபாயம் ஏற்பட்டுள்ளது.
- இது இந்தியா மட்டுமின்றி உலகம் முழுவதும் பாதிப்பை உண்டாக்கும். ஏனெனில், உலகின் 5- இல் ஒரு பங்கு கச்சா எண்ணெய் மற்றும் திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயு ஹோர்முஸ் நீரிணை வழியே சீனா, ஜப்பான், தென் கொரியா என ஆசியாவின் பெரும் பொருளாதார நாடுகளுக்கு விநியோகிக்கப்படுகிறது என்றார்.

5. காவல் சீர்திருத்தம்: ஒரு கானல் நீராக மாறுதல் - இந்திய காவல் அமைப்பின் தற்போதைய நிலை மற்றும் தேவையான சீர்திருத்தங்களின் தேக்கநிலை பற்றிய ஒரு விமர்சன பகுப்பாய்வு :-

(i) காவல் நடத்தையில் தற்போதைய நெருக்கடி

- பாலியல் வன்கொடுமைக்காக இரண்டு அதிகாரிகள் பணிநீக்கம்,

போதைப்பொருள் கடத்தலுக்காக மூன்று அதிகாரிகள் இடைநீக்கம், மற்றும் ஒரு போலீஸ் வாகனம் சம்பந்தப்பட்ட கடத்தல் வழக்கு உள்ளிட்ட காவல்துறையின் தவறான நடத்தை தொடர்பான சமீபத்திய தலைப்புச் செய்திகள்.

- உலகளவில் காவல் மரணங்களின் மிக உயர்ந்த விகிதங்களில் இந்தியாவும் ஒன்று, நாடு முழுவதும் தினமும் சராசரியாக ஏழு இறப்புகள் நிகழ்கின்றன.
- உலக சித்திரவதைக்கு எதிரான அமைப்பால் வெளியிடப்பட்ட உலகளாவிய சித்திரவதை குறியீடு 2025 இன் படி, காவல்துறை மற்றும் சிறைத் துறைகளுக்குள் அதிக அளவில் சித்திரவதை மற்றும் மனிதாபிமானமற்ற நடத்தை உள்ள நாடுகளில் இந்தியாவும் பட்டியலிடப்பட்டுள்ளது.

(ii) காலனித்துவ சட்ட அடித்தளங்கள்

- தற்போதைய காவல் அமைப்பு இன்னும் அடிப்படையில் 1861 ஆம் ஆண்டு இந்திய காவல் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டது, இது 1857 சிப்பாய் கலகத்தைத் தொடர்ந்து ஆங்கிலேயர்களால் இயற்றப்பட்டது.
- பிரிட்டிஷ்காரர்கள் குடிமக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்குப் பதிலாக, கருத்து வேறுபாடுகளை அடக்குவதற்கும் காலனித்துவ வர்த்தக நலன்களைப் பாதுகாப்பதற்கும் காவல்துறையை வடிவமைத்தனர்.
- 1950 அரசியலமைப்பின் கீழ் காவல் துறை "மாநிலப் பட்டியல்" பாடமாக மாறிய போதிலும், காலனித்துவ சட்டம் ஒருபோதும் ஜனநாயக கட்டமைப்பால் மாற்றப்படவில்லை; அது மாநில அளவிலான சிறிய திருத்தங்களுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(iii) அரசியல் தலையீடு மற்றும் கட்டமைப்பு குறைபாடுகள்

- பொதுமக்களுக்கு சேவை செய்வதற்குப் பதிலாக, ஆளும் மாநில அரசு அரசியல் திட்டங்களை நிறைவேற்றுவதற்கான ஒரு கருவியாக காவல்துறை தொடர்ந்து செயல்படுகிறது.
- பல மாநிலங்களில், முக்கிய காவல்துறை நியமனங்கள் மற்றும் இடமாற்றங்கள் அதிகாரத்தில் இருப்பவர்களின் அரசியல் ஆதரவைப் பொறுத்தது.
- அரசியல் அழுத்தம் பெரும்பாலும் குற்றவியல் விசாரணைகளை ஆணையிடுகிறது, இது அரசாங்க ஆதரவாளர்களைப் பாதுகாக்கும் அதே வேளையில் அரசியல் காரணங்களுக்காக எதிர்க்கட்சி உறுப்பினர்களைக் கைது செய்வதற்கு வழிவகுக்கிறது.

(iv) தோல்வியுற்ற சீர்திருத்த முயற்சிகளின் வரலாறு

- தேசிய காவல் ஆணையம் (1977): இந்த ஆணையம் 1861 சட்டத்தை ரத்து செய்து, காவல்துறையை அரசியல் அழுத்தத்திலிருந்து சுயாதீனமாக்க பரிந்துரைத்தது, அதே நேரத்தில் காவல்துறையின் அத்துமீறல்களை விசாரிக்க "சுயாதீன புகார் அதிகாரிகள்" இருப்பதையும் பரிந்துரைத்தது.
- சோலி சோராப்ஜி குழு (2005): ஒரு புதிய மாதிரி காவல் சட்டத்தை

வரைவதற்காக மத்திய உள்துறை அமைச்சகம் இந்த நிபுணர் குழுவை உருவாக்கியது, இது அக்டோபர் 2006 இல் சமர்ப்பிக்கப்பட்டது; இருப்பினும், மாநில அரசுகள் அதை ஏற்றுக்கொள்வதில் மிகக் குறைந்த அக்கறையைக் காட்டின.

- உச்ச நீதிமன்றத் தீர்ப்பு (பிரகாஷ் சிங் வழக்கு, 2006): உச்ச நீதிமன்றம் முக்கிய வழிகாட்டுதல்களை வெளியிட்டது, அவற்றில் பின்வருவன அடங்கும்:
- அரசாங்கத்தின் தலையீட்டைக் கட்டுப்படுத்த ஒரு மாநில பாதுகாப்பு ஆணையத்தை நிறுவுதல்.
- காவல்துறை தலைமை இயக்குநருக்கு (DGP) வெளிப்படையான தேர்வு மற்றும் நிலையான பதவிக்காலம்.
- இடமாற்றங்கள் மற்றும் பதவி உயர்வுகளுக்கு காவல் நிறுவன வாரியங்களை அமைத்தல்.
- பொதுமக்களுக்கு சுயாதீனமான புகார் அதிகாரிகளை உருவாக்குதல்.

(v) சீர்திருத்தத்தின் "கானல்"

- செயல்படுத்துவதில் தோல்வி: உச்ச நீதிமன்றத்தின் 2006 உத்தரவுகளை, குறிப்பாக டிஜிபி நியமனம் வெளிப்படையாக இருப்பது தொடர்பாக, எந்த மாநிலமும் முழுமையாக செயல்படுத்தவில்லை.
- வளர்ந்த நாடுகளில் சேவை சார்ந்த காவல் படைகள் இருந்தாலும், இந்திய காவல்துறை காலனித்துவ மனநிலையில் சிக்கித் தவிக்கிறது.
- அரசியல் சீரமைப்பு: காவல் அதிகாரிகள் தங்கள் பணிக் காலத்தில் அரசியல் கட்சிகளுடன் தங்களை அடையாளப்படுத்திக்கொள்ளும் வரை, உண்மையான சீர்திருத்தம் என்பது அடைய முடியாத ஒரு மாயத்தோற்றமாகவே இருக்கும்